அதனுடைய ஆயுள் ஏறத்தாழ 100 ஆண்டுகள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, பர்மா அகதிகளுக்கு வீடுகள் கட்டுவதற்காகக் கொடுக்கப்படும் கடன்களுக்குப் பதிலாக இந்தமாதிரி குறைந்த விலையில், குறைந்த நேரத்தில் கட்டிக் கொடுக்கப்படும் அரசாங்க வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, பர்மா அகதிகளுக்கு இப்பொழுது மதுரை மாவட்டத்திலே வீடுகள் வேண்டுமென்று கேட்டு, ஒரு வீட்டிற்கு 4,000 ரூபாய் என்ற அளவில், 'கேடரைட் டைப்' பில் வீடுகள் கட்டி, கம்பியில்லாமல் கட்டி, 100 வீடுகள் கட்டி முடிக்கும் தறுவாயில் இருக்கிறது. 400 வீடுகளுக்குத் திட்டமிடப்பட்டு 16 இலட்சம் ரூபாயில் செயல் படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்முடிப்பூண்டியிலுள்ள வனத்துறை நிலங்கள்.

* 307. வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மின் சாரத்துறை அமைச்சர் நயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், கொண்டமநல்லூர், அமரம் பேடு, ஈகுவார்ப்பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள வனத்துறை நிலங்களை நீண்ட காலமாகச் சாகுபடி செய்துவரும் நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை

திரு. கா. வேழவேந்தன் : சென்ற ஆண்டு முதல்வர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் காட்டு இலாகா நிலங்களை 50,000 ஏக்கர் ஏழை உழவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் இந்த மூன்று கிராமங் களிலும் ஏற்கனவே பயிரிட்டுக் கொண்டிருக்கும் காட்டு நிலங்களை ஏழை அரிசனங்களுக்குக் கொடுக்க அரசு சிறப்பாணை பிறப் பிக்குமா ?

1973 மார்ச் 9]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏற்கனவே முடிவு எடுத்த படி 50,000 ஏக்கர் நிலங்கள் கொடுக்க ஏற்பாடு செய்தாகிவிட்டது. இதைத் தனியாகப் பரிசீலிக்க வேண்டும்.

திரு. அ. ஆறுமுகம் : விவசாயம் செய்யத்தக்க நல்ல நிலங்கள் பல ஏக்கர் காட்டு நிலங்கள் என்ற பெயரால் உள்ளன. அப்படிப் பட்ட நிலங்களைக் காட்டிலாகாவில் இருந்து எடுத்து விவசாயம் செய்ய விவசாயிகளுக்கு அரசு பட்டா வழங்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : காட்டு இலாகாவுக்கும் அதிக நிலம் இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : பல ஆண்டுகளாக காட்டு நிலங்களை ஆக்கிரமித்து பயிரிட்டுக் கொண்டு வருகிற ஏழை எளியவர் களுக்குப் பட்டா செய்து தரவேண்டுமென்றால் அதை டி-நோடிபை செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அரசு உடனடியாக அதைப் பற்றிப் பரிசீலித்து அதுபோன்ற நிலங்களை டி-நோடிபை செய்து பட்டா வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 50,000 ஏக்கரில் சரிபாதி ஏற்கனவே என்க்ரோச் செய்யப்பட்ட நிலங்கள். காட்டு இலாகாவுக்கும் நிலங்கள் தேவையாக இருப்பதால் மற்ற நிலங் களைப் பற்றிப் பரிசீலித்துத்தான் முடிவு செய்ய முடியும்.

Extraction of perfumes

* 308 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether perfumes are extracted in the Government plantations; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) அரசுக்குச் சொந்தமான சின்கோனா தொழிற்சாலை மூலம் வாசனைத் தைலங்கள் நடுவட்டம் என்ற இடத்தில் தயாரிக்கப்படுகின்றன.